# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2344/40 - 2023 අගෝස්තු මස 11 වැනි සිකුරාදා - 2023.08.11

*2344/40 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1912 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பொது அரங்காட்டல் சபைச் சட்டம்*

*1969 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1912 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பொது அரங்காட்டல் சபைச் சட்டத்தின் 3 ஆவது மற்றும் 6(10) ஆம் பிரிவுகளின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகள்.*

**கலாநிதி பந்துல குணவர்தன,**
வெகுசன ஊடக அமைச்சர்.

வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு,
*2023, ஓகத்து 10.*

ஒழுங்கு விதிகள்

01. இந்த ஒழுங்கு விதிகள் "அரங்காட்டல் சட்டத்தின் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடும் 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஒழுங்கு விதிகள்" என அழைக்கப்படுவதோடு, அது 2023, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும். 2015, ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய இல.1922/49 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஒழுங்கு விதிகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.


1A - PG 40094 — 07 (2023/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

02. இலங்கையில் அரங்காட்டல் சட்டத்தின் கீழ் பொதுமக்களின் பார்வைக்காக சட்ட ரீதியான அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் அனைத்து ஆட்களும் /நிறுவனங்களும் அந்த விண்ணப்பப்படிவத்துடன் பின்வருமாறு அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(அ) திரைப்படங்கள் :

| | | |
|---|---|---|
| (i) | வெளிநாட்டு திரைப்படம் (முன் விளம்பரப் படம் உள்ளடங்களாக) | - ரூபா 40,000.00 |
| (ii) | உள்நாட்டு திரைப்படம் (முன் விளம்பரப் படம் உள்ளடங்களாக) | - ரூபா 15,000.00 |
| (iii) | முன் விளம்பரப் படத்திற்கு மாத்திரம் | - ரூபா 1,500.00 |
| (iv) | வரையறுக்கப்பட்ட காட்சிகளுக்கு டி.வி.டி/புலூரே திரைப்படங்களுக்கு | - ரூபா 1,500.00 |
| (v) | மேற்குறிப்பிடப்பட்ட (i), (ii), (iii) மற்றும் (iv) பணிகளுக்கு அல்லது ஆய்வுப் பணிகளுக்கு திரையரங்குகளைப் பயன்படுத்தும் கட்டணம் | - ரூபா 37,500.00 |

(அ.I) உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை சபைக்கு சமர்ப்பித்த பின்னர் வேலை நாட்கள் 5 இற்குள் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுவதோடு, அவசர தேவை நிமித்தம் குறுகிய காலத்திற்குள் அனுமதிப் பத்திரம் தேவைப்படுமிடத்து பின்வருமாறு மேலதிகக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(i) 24 மணி நேரத்திற்குள் பெற்றுக்கொள்வதற்காக உரிய கட்டணத்தில் நூற்றுக்கு ஐம்பது சதவீத மேலதிகக் கட்டணம்.

(ii) ஒருநாள் சேவைக்காக உரிய கட்டணத்தில் நூற்றுக்கு ஐம்பது சதவீத மேலதிகக் கட்டணம். (ஒருநாள் சேவைக்கு வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கு முன்னர் விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.)

(iii) அரங்காட்டல் சபையினது அரங்கில் திரையிடுவதற்கான வசதி இல்லாத சந்தர்ப்பங்களில் ஏற்புடைய நாட்களுக்கு அமைவாக சபை சார்பில் திரையிடும் பொறுப்பை விண்ணப்பதாரி பொறுப்பேற்றல் வேண்டும்.

(iv) 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் சபைக்கு அறிவிப்பதன் மூலம், திரையிடுவதற்கு குறிக்கப்பட்ட திகதியை மாற்றியமைப்பதற்கான சந்தர்ப்பம் விண்ணப்பதாரிக்கு உண்டு. எனினும், அதற்கு குறைந்த காலப் பகுதியில் அல்லது ஆரம்பமாக மாற்றியமைத்து பின்னர் மீண்டும் மாற்றியமைக்கும் போது அவ்வாறு மாற்றியமைக்கும் ஒவ்வொரு தடவைக்கும் ரூ. 5,000.00 மேலதிக கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) மேடை நாடகங்கள்

| | | |
|---|---|---|
| (i) | மேடை நாடகங்கள் நீண்ட | - ரூபா 1,500.00 |
| (ii) | மேடை நாடகங்கள் குறுகிய | - ரூபா 750.00 |

(ஆ.I) மேடை நாடகங்களுக்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அதன் பிரதிகள் பொதுமக்கள் காட்சிப்படுத்தலுக்கு 21 நாட்களுக்கு முன்னர் சபைக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் ஒப்படைக்கப்படும் நாடகப் பிரதிகளுக்கு உரிய கட்டணத்தின் நூற்றுக்கு நூறு சதவீத மேலதிகக் கட்டணம் அறவிடப்படும்.

(இ) இசைக் கச்சேரிகள் மற்றும் காட்சிப்படுத்தல்கள்

| | | |
|---|---|---|
| (i) | உள்நாட்டுக் கலைஞர்கள் பங்குபற்றும் திறந்தவெளி இசைக் கச்சேரி | - ரூபா 3,750.00 |
| (ii) | உள்நாட்டுக் கலைஞர்கள் பங்குபற்றும் மண்டப இசைக் கச்சேரி | - ரூபா 3,000.00 |
| (iii) | வெளிநாட்டுக் கலைஞர்கள் பங்குபற்றும் திறந்தவெளி இசைக்கச்சேரி | - ரூபா 37,500.00 |
| (iv) | வெளிநாட்டுக் கலைஞர்கள் பங்குபற்றும் மண்டப இசைக் கச்சேரி | - ரூபா 22,500.00 |
| | தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகள் மூலம் நேரடியாக ஏற்பாடு செய்யப்படும் இசைக் கச்சேரிகள் | - ரூபா 37,500.00 |
| (vi) | முன்பள்ளிக் கச்சேரிகள் | - ரூபா 2,000.00 |

(ஈ.I) இசை மற்றும் காட்சிப்படுத்தல்களுக்கான விண்ணப்பங்கள் பொதுமக்களின் பார்வைக்காக விடப்படும் 10 நாட்களுக்கு முன்னர் சபைக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்களுக்கு உரிய கட்டணத்திலிருந்து நூற்றுக்கு இருபத்தைந்து சதவீத மேலதிகக் கட்டணம் அறவிடப்படும்.

03. ஏதேனும், சமூக, கல்வி, கலாச்சார மற்றும் சமய முக்கியத்துவம்மிக்க எந்தவொரு காட்சிப்படுத்தலுக்குமான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை சபையின் தற்துணிவின் பேரில் ஏற்புடைய கட்டணத்திலிருந்து விடுவிக்க முடியும். கட்டணத்தை விடுவித்துக்கொள்வதற்கான கோரிக்கைகள் பொதுமக்களின் பார்வைக்கு விடப்படும் 14 நாட்களுக்கு முன்னர் சபையிடம் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

04. காணாமல்போன அனுமதிப்பத்திரத்திற்காக மீண்டும் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள அவசியம் எனின், அதற்காக ரூபா. 1,500.00 கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

EOG 08-115

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.